
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1023**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

**ர.பிரகாசு**

**89**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




# அசைத்துப் பார்க்க முடியாத அறிவியக்கம்!

தி.மு.கழக மேடைகள் என்றால் தற்பெருமை பேசுவதோ, எதிர்க்கட்சிகளை வசைபாடுவதோ அல்ல, அறிவுச்செயல்பாடுகளை முன்னெடுப்பது, அதன் ஊடாக தமிழ்ச்சமூகத்தின் வளர்ச்சியை கட்டியெழுப்புவது என்ற இலட்சியம் அதன் தொடக்ககாலம் தொட்டே உறுதியோடு இருந்தது. அண்ணா மட்டுமல்ல, அவருடைய தம்பிமார்களும் அவ்வழியே பீடுநடை போட்டனர் என்பதை உணர்த்திய மாநாடு, 1953-இல் நடைபெற்ற கோவை மாவட்ட தி.மு.கழக இரண்டாவது மாநாடு.

பிப்ரவரி 15, 15 ஆகிய 2 நாட்கள் மேட்டுப் பாளையத்தில் இம்மாநாடு நடைபெற்றது. கழகத்திற்காக உயிர் நீத்த நெல்லிக்குப்பம் மஜீத், வண்ணை பாண்டியன் பெயர்கள் மாநாட்டுப் பந்தலுக்கு சூட்டப்பட்டிருந்தன. முகப்பிலே அண்ணாவின் அழகோவியம் அனைவரையும் வரவேற்றது. கோவை மாவட்ட களப்போராளி உடுமலை கனக ராசனின் பெயர் மாநாட்டு மேடைக்கு சூட்டப்பட்டிருந்தது. முதல்நாள் காலையில் ஊர்வலத்துடன் சமூக சீர்திருத்த மாநாடு தொடங்கியது. சி.பி.சிற்றரசு மாநாட்டை தொடங்கிவைக்க, அருண்மொழி ஓவியக் கலைக்கண்காட்சியை திறந்துவைத்தார். அன்றைய கோவை மாவட்ட கழகச் செயலாளரான ஈ.வி.கே.சம்பத் வரவேற்புரையாற்றினார்.

சீர்திருத்த மாநாட்டின் தலைவர் கலைஞர், மாலை 3 மணிக்கு தனது முன்னுரையை வழங்கினார். பின்னர் என்.என்.இளங்கோ, வழக்கறிஞர் இளம்வழுதி, பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

முதல் நாள் இரவு 10 மணிக்கு பேரறிஞர் அண்ணாவின் ‘காதல் ஜோதி’ நாடகம் நடைபெற்றது. நடிப்பிசைப் புலவர் கே. ஆர்.இராமசாமி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், டி.வி.நாராயணசாமி, என்.நாராயணப்பிள்ளை உள்ளிட்டோர் நடித்திருந்தனர்.

மறுநாள் காலையில் நாகூர் ஹனீபா, சேலம் சீனிவாசன் இன்னிசை நிகழ்ச்சியோடு அரசியல் மாநாடு தொடங்கியது. மனோகரன் மாநாட்டை தொடங்கிவைக்க, நாவலர் நெடுஞ்செழியன் மாநாட்டுக்கு தலைமை ஏற்று சொற்பொழிவாற்றினார். சத்தியவாணி முத்து, ஏ.வி.பி.ஆசைத்தம்பி, என்.வி.நடராசன், கண்ணதாசன், மதியழகன், ஆகியோர் எழுச்சிமிக்க உரையாற்றினர். தேயிலைத்தோட்ட பணியாளர்களின் ஊதிய பாகுபாட்டை களைய வேண்டும், 5-6 ஆண்டுகளாக நிலவிவந்த வறட்சியின் காரணமாக ஏற்பட்ட பஞ்சத்தை கருத்தில்கொண்டு ஜாதி- மத பாகுபாடில்லாமல் கஞ்சித்தொட்டி திறக்க வேண்டும், நீலகிரி மாவட்டத்தில் கல்லூரி அமைக்க வேண்டும், லாரி- பேருந்துகளுக்கு அதிக வரி விதிக்கக்கூடாது, மின்வெட்டால் ஆலைத்தொழிலாளர்கள் அவதியுறுவதால் அவர்களுக்கு அரசு நிதியுதவி அளிக்க வேண்டும் என 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

அதில், ‘பராசக்தி திரைப்படத்திற்கு தடை விதிக்க மத்திய சர்க்கார் ஏற்பாடு செய்வதாக தெரிகிறது. அப்படி தடை செய்யப்பட்டால், அது இந்நாட்டின் ஜீவாதாரமான உரிமையை பறிப்பதாகும்’ என்ற தீர்மானமும், கேரளத்தில் இயக்க பிரச்சாரத்திற்காக மலையாள மொழியில் ஒரு பத்திரிகையை நடத்தவும், பிரச்சாரம் செய்ய ஒரு குழு அமைக்கவும் மத்திய கழகத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது’ என்ற தீர்மானமும் கவனிப்பை ஏற்படுத்தின.

உடல்நலம் குன்றி இருந்ததால் அண்ணா இம்மாநாட்டில் நீண்ட நேரம் பேசவில்லை. “கடவுள்களில் இருந்து காங்கிரஸ் வரை, சாக்ரடீசிலிருந்து மாசே துங் வரை, கைத்தறியாளர் பிரச்சினையில் இருந்து கண்ணீர் சிந்தும் தஞ்சைத் தரணி வரையில் எல்லா விஷயங்களும் என் தம்பிமார்களின் பேச்சில் இருந்தது. அவர்கள் காட்டிய ஆதாரங்கள் ஆற்றல் உள்ளவைகள். ஆற்றல் மட்டுமல்ல அப்பழுக்கற்றவை. ஆராய்ச்சியாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவை” என்று கூறி தி.மு.கழக இளம் படைவரிசையின் அறிவை -ஆற்றலை பறைசாற்றினார் அண்ணா. இறுதியாக அண்ணாவின் சந்திரோதயம் நாடகத்துடன் மாநாடு முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## முற்போக்கு புத்தகக் காட்சிகள் அவசியமானவை!

கழகத்தின் பவள விழா நிறைவு கொண்டாட்டமாக நடைபெற்ற திமுக 75 அறிவுத் திருவிழாவுடன், நவம்பர் 8-ஆம் தேதி தொடங்கி,16-ஆம் தேதி வரை, முற்போக்குப் புத்தகக் காட்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. 46 பதிப்பகங்கள், 58 அரங்குகளுடன் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த முற்போக்கு புத்தகக் காட்சி தமிழ் அறிவு தளத்தில் விரிவான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கலந்து கொண்ட பதிப்பாளர்களும் இந்த முன்னெடுப்பின் அவசியத்தை தொடர்ச்சியாக பகிர்ந்து வருகின்றனர். திராவிட கருத்தியல், இடதுசாரி, அம்பேத்கரிய கருத்தியல் நூல்களின் சங்கமமாக இந்தப் புத்தக காட்சி அமைந்தது குறித்து, ’அருவி பொத்தக உலகம் ’ பதிப்பகத்தின் பொழிலன், ஆக்கபூர்வமான சில கருத்துகளை முகநூலில் பகிர்ந்துள்ளார்.

‘தமிழ்நாட்டில் புதிய முயற்சியாக முற்போக்கு நூல்களை மட்டுமே கொண்ட புத்தகக் காட்சி தொடங்கப்பட்டது சிறப்புக்குரியது.தொடங்கியிருப்பது தி.மு.க. ஆயிற்றே, அது எவ்வாறு முற்போக்காகும்? - என்பதாகச் சிலர் முற்போக்கு உச்சத்திலிருந்து கேள்வி எழுப்புகின்றனர்.

முற்போக்குப் புத்தகங்களின் ஒருங்கிணைப்புக் காட்சி - என எந்த ஓர் ஒருங்கிணைப்பும் இதற்கு முன்பாக யாரும் முன்னெடுத்துச் செய்திடவில்லை. இந்த நிலையில் தங்களைக் கடுமையாகத் திறனாய்கிற பதிப்பகங்களைக்கூட அழைத்து அரங்கு கொடுத்து முன்னெடுத்து நடத்தப்பட்டுள்ள தி.மு.க.வின் இந்த முயற்சியை நெஞ்சாரப் பாராட்டுகிறோம்.

முதல்வர் அவர்கள் இரண்டு மணி நேரம் அளவில் புத்தகக் காட்சியின் ஒவ்வோர் அரங்காகச் சென்று பேசி புத்தகங்கள் வாங்கிச் சென்ற நிகழ்வு மிகவும் சிறப்புக்குரியது. தமிழ்நாட்டின் முற்போக்கர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுகிற பெரு உணர்ச்சிக்கு இத்தகைய நகர்வுகள் மிகவும் அடிப்படையானவை.

அப்படியான இணக்கப் போக்குகளே பார்ப்பனியத்தையும் முதலாளியத்தையும் வீழ்த்த வேண்டிய முதற்படி என்பதை முற்போக்கர்கள் முதலில் உணரவேண்டும்’ என்கிறது அவரது பதிவு. அதே சூழலில் சில திருத்தங்களையும் அக்கறையோடு பொழிலன் தெரிவித்துள்ளது சிறப்புக்குரியது.

## பாசறை படிப்பறை


**கௌதம் ராஜ்**

**89**

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# பீகாரின் மனசாட்சி!

தமிழ்நாடும் பீகாரும் இன்றைக்கு சமூக பொருளாதார ரீதியாக முரண்பட்ட நிலையில் இருக்கும் மாநிலங்கள். ஆனால் அரசியல் ரீதியாக இவ்விரு மாநிலங்களுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி என்பது இயக்கமாக 1916 தொடங்கி 1967இல் அரசியல் அதிகாரமாக நிலைபெறுகிறது. பீகாரில் விடுதலைக்கு பின்னான லோஹியா முன்னெடுத்த சோசியலிச கொள்கைகளால் உந்தப்பட்டு எமர்ஜென்சி காலகட்டத்தில் வலிமையடைந்து, மண்டல் அமலுக்கு வந்த நேரத்தில் அரசியல் அதிகாரமாக நிறைவை எட்டியது.




தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் முகமாக 70 ஆண்டுகளுக்கு மேலாக கலைஞர் விளங்கினார் என்றால் பீகாரில் லாலு பிரசாத் யாதவ் விளங்கினார். லோஹியா, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோர் லாலுவுக்கு முன்னோடிகளாக விளங்கினர். கலைஞருக்குப் பெரியாரும் அண்ணாவும் போல்.

அப்படியான அரசியல் பாரம்பரியம் கொண்ட பீகார் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. லாலுவின் புதல்வர் தேஜஸ்வி யாதவை முதலமைச்சர் வேட்பாளராகக் கொண்டு தேர்தலை சந்தித்த மெகா கூட்டணி தோல்வி அடைந்துள்ளது. இந்நேரத்தில் பீகாரின் அரசியலை புரிந்துகொள்ள லாலுவின் தன் வரலாற்று நூலான “GOPALGANJ TO RAISINA ROAD” இன்றியமையா ஒன்று.

கலைஞரை விடக் கால் நூற்றாண்டு இளையவர் லாலு. விளிம்புநிலை மக்களை அதிகாரம் நோக்கியும் சுயமரியாதை நோக்கியும் நகர்த்திய முற்போக்கு இயக்கத்தின் பிரதிநிதியாக பீகாரில் லாலு விளங்கினார். கொண்ட கொள்கையில் சமரசங்களுக்கு இடமில்லாமல் முடிந்த வரையில் தன்னுடைய இயக்கத்தின் பாதையையும் பயணத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக லாலு திகழ்ந்தார். அடுத்த கட்ட அரசியல் தலைமையை வார்த்தெடுப்பதிலும் அவரது செயல்பாடு திருப்திகரமானது. தேஜஸ்வி தன்னுடைய செயல்பாடுகள் மூலம் அதை நிரூபித்து வருகிறார்.

பாஜகவுக்கு கடும் எதிர்ப்பினை வழங்கும் ஜனநாயக சக்தியாக பீகாரில் லாலுவின் ஆர்.ஜே.டி-யை குறிப்பிட முடியும். பாஜக எதிர்ப்பு என்பது கல்லூரி நாட்கள் முதலே லாலு ரத்தத்தோடு ஊறிப் போன ஒன்றாக இருந்துள்ளதை அறிய முடிகிறது. ரத யாத்திரையின்போது அத்வானியை கைது செய்ய அதுவே அவருக்கு உந்து சந்தியாக விளங்கியிருக்கிறது. அதை போலவே ஆதிக்க எதிர்ப்பையும் அவர் ஆழமாக கடைப்பிடித்தார். நெருக்கடி நிலை காலத்தில் அதை எதிர்த்ததால் மிசாவில் கைதானார். அந்த தாக்கத்தில் தனது மகளுக்கு ‘மிசா’ என்றே பெயர் வைத்தார்.

தமிழ்நாட்டிலும் பீகாரிலும், ஏன் இந்திய ஒன்றிய அளவிலும் காங்கிரஸ் கட்சிக்கு மிக அணுக்கமான கூட்டணி கட்சிகளாக தி.மு.க.வும், ஆர்.ஜே.டி.யுமே திகழ்கின்றன. இந்த உறவு எப்படி இத்தனை உறுதியாக வளர்ச்சி பெற்றது என்பதை இந்த நூல், லாலுவின் வாழ்க்கை வழி நமக்கு தெரியப்படுத்துகிறது. லாலுவின் சுயசரிதையுடன் பீகாரின் அரசியலையும் நமக்கு மிக எளிதாக கடத்தும் இந்த வாழ்க்கை வரலாற்று நூல் இந்த சமயத்தில் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்



### நேர்காணல் தந்த உற்சாகம்!



மு.மோகன்தாஸ்

2016-ஆம், ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் செய்யூர் தொகுதிக்கு வேட்புமனு தாக்கல் செய்தேன். அப்போது கழகத் தலைவர், பேராசிரியர் மற்றும் அப்போது கழக செயல் தலைவராக இருந்த இன்றைய கழகத் தலைவர் அவர்கள் என அனைவரும் என்னிடம் நேர்காணல் செய்தனர். என் வாழ்வில் மறக்க முடியாத தருணம்.

**- மு.மோகன்தாஸ்,**
**தலைமை பொதுக்குழு உறுப்பினர்,**
**காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### தஞ்சை தொழிலாளர் போராட்டம்!

1958 நவம்பர் 14-ஆம் தேதி முதல் தஞ்சை எஸ்.எம்.டி.பேருந்து தொழிலாளர் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்திற்கு தி.மு.கழகம் தனது ஆதரவை வழங்கியது. போராட்டம் குறித்து ’நம்நாடு’ ஏட்டில் தினந்தோறும் செய்தி வெளியாகி வந்தது. கழகத் தலைவர்கள் நேரடியாகச் சென்று போராட்டத்தில் பங்கேற்றதுடன் பொதுமக்களிடம் நிதி வசூலித்தும் போராட்டத்தை வலுப்படுத்தினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131